ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2196/40 - 2020 ඔක්තෝබර් මස 07 වැනි බදාදා - 2020.10.07
2196/40 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதி புதன்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/1978* (X) (*அ*).

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும் PV 66705 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டுள்ளதுமான காட்சு (KAATSU) - ஹய்லி அட்வான்ஸ்ட் மெடிகல் டெக்னோலொஜி டிறெயினிங் சென்றர் (பிறைவேட்) லிமிட்டெட் (KIU) தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும், 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதிய 2164/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணை II ஐ, அதற்கான நிரல் I இலும் மற்றும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவிலும் காணப்படும் "முகாமைத்துவ மூலோபாயத்தில் வியாபார நிருவாக முதுமாணி" என்னும் பதிவினை உடனடுத்து இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய இதற்கான அட்டவணை II இல் முறையே நிரல் I இன் கீழும் மற்றும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.

1A - PG 5149 — 520 (2020/10)
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. காட்சு (KAATSU) - ஹய்லி அட்வான்ஸ்ட் மெடிகல் டெக்னோலொஜி டிறெயினிங் சென்றர் (பிறைவேற்) லிமிட்டெட் (KIU) ஆனது, தாதியியலில் தத்துவவியல் முதுமாணி (SLQF மட்டம் II) தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டம் தொடர்பான பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்ளும்போது, இலங்கைத் தகைமை கட்டுக்கோப்பில் (SLQF) விதித்துரைக்கப்பட்டவாறான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதலும் வேண்டும்:-

(அ) குறைந்தபட்சம் 30 விசேட சித்திகளுடன் இயைபான கற்கைத்துறையில் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஓர் இளமாணி சிறப்புப் பட்டத்தில் (SLQF) மட்டம் 6 ஐ வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தல் ; அல்லது

(ஆ) தொடர்புபட்டவொரு கற்கைத்துறையில் குறைந்தபட்சம் 30 விசேட சித்திகளுடன் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஓர் இளமாணி சிறப்புப் பட்டத்தின் SLQF மட்டம் 06 ஐ வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தல் ; அல்லது

(இ) 0-4 என்ற அளவுமட்டத்தில் 3.0 என்ற குறைந்தபட்ச GPA யுடன் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஓர் இளமாணிப் பட்டத்தில் SLQF மட்டம் 5 ஐ வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தலும் மற்றும் கற்கையின் அதே அல்லது தொடர்புபட்ட துறையில் SLQF மட்டம் 6 றுக்கு சமமான 30 விசேட சித்திகளைப் பூர்த்திசெய்த பின்னர் நடாத்தப்படும் தகைமையளிக்கும் பரீட்சையொன்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தலும் ; அல்லது

(ஈ) கற்கையின் இயைபான துறையொன்றின் SLQF மட்டம் 7 ஐ அல்லது அதற்கு மேற்பட்டதை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தல் ; அல்லது

(உ) 0-4 என்ற அளவு மட்டத்தில் 3.0 என்ற குறைந்தபட்ச GPA யுடன் NVQ மட்டம் 7 ஐ வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தலும் மற்றும் அந்த விசேடித்த துறையில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்குக் குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் தீர்மானிக்கப்பட்டவாறு SLQF மட்டம் 6 க்கு அல்லது 7 க்கு சமமான 30 விசேட சித்திகளைப் பூர்த்திசெய்த பின்னர் நடாத்தப்படும் தகைமையளிக்கும் பரீட்சையொன்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தல்.

2. காட்சு (KAATSU) - ஹய்லி அட்வான்ஸ்ட் மெடிகல் டெக்னொலொஜி டிறெயினிங் சென்றர் (பிறைவேட்) லிமிட்டெட் (KIU) குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (05) ஆண்டு மீள் பரிசீலனைக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது.

**அட்டவணை II**

| நிரல் I<br>பட்டம் | நிரல் II<br>பட்டத்துக்கான சுருக்கீடு |
|---|---|
| தாதியியலில் தத்துவவியல் முதுமாணி | எம்பில் (தாதியியல்) |

பேராசிரியர் **ஜீ. எல். பீரிஸ்,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2020, ஒற்றோபர் 02.

10-866

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.